[2018 ஜுன் 28

(இ) கோவை மாநகராட்சிப் பகுதிகளில் முழுநேரம் குடிநீர் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்த தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கார்த்திக், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்துவிட்டு, உட்காருங்கள். அவ்வளவுதான்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28–2–2008 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே கோவை மாநகராட்சிப் பகுதியில் 24 மணி நேரமும், வாரத்தில் 7 தினங்களும், குடிநீர் விநியோகம் செய்வதற்கான திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அடிப்படைப் பணிகளை மாநகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலமாகத் தொடங்கினோம். 31–1–2011 அன்று மத்திய, மாநில அரசுகள் அளிக்கும் மானியத்துடன் நிதி ஒதுக்குவதற்கும், திட்ட அனுமதி கேட்டு மாநகராட்சியிலே தீர்மானத்தைக் கொண்டு வந்தோம். குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கார்த்திக், கொஞ்சம் இருங்கள். இன்று காலையில் நான் உங்களிடம் என்ன சொன்னேன்? உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கவனத்தை ஈர்ப்பது மாதிரி உங்கள் கருத்தைச் சொல்லுங்கள் என்று சொன்னேன். நீங்கள் இப்படி விவாதமாகப் பேசிக்கொண்டிருந்தால், நான் உங்களை தகவல் கோரல் என்ற முறையில் அனுமதிப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது? உங்களை தகவல் கோரல் என்ற முறையில்தான் பேச அனுமதித்துள்ளேன். உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கவனத்தை ஈர்த்து அமருங்கள், அவ்வளவுதான்.*

திரு. நா. கார்த்திக்: *தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்திற்காக தனியார் யாருக்கும் நாங்கள் டெண்டர் வழங்கவில்லை. ஆனால், இன்றைக்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கார்த்திக், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசி முடிக்கமாட்டீர்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், உறுப்பினர் சொல்வது உங்களுக்குத் தெரிகிறதல்லவா? நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் detail ஆகப் போகிறார். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

2018 ஜூன் 28]

திரு. நா. கார்த்திக்: *திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே அடிப்படைப் பணிகளுக்கு மட்டுமே தீர்மானம் வடிவமைக்கப்பட்டது. ஆனால், 8 ஆண்டுகளுக்குப் பிறகு, 8–1–2018 அன்று திட்ட ஆய்வு, கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை 26 ஆண்டுக் காலத்திற்கு 3,150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாநகராட்சி நிருவாகத்தால் பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த* Suez *என்ற ஒரு நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர் மன்றம் இல்லாத நேரத்தில், கிட்டத்தட்ட 26 ஆண்டுக் காலத்திற்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு மாநகராட்சி நிருவாகம் இப்படிப்பட்ட திட்ட அனுமதியை வழங்கலாமா என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டு அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய 24*x7 *குடிநீர்த் திட்டத்தைப்பற்றி 2 நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார். நான் முதலில் இந்தப் பிரச்சினை குறித்து ஒருசில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவரே சொன்னார்; 2008–ல் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே இந்தத் திட்டம் அவசியமான திட்டம் என்பதால் சில பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முன்பு 72 வார்டுகளாக இருந்தன. விரிவாக்கத்திற்குப் பின் 60 வார்டுகளாக மாறியது. விரிவாக்கம் செய்யப்படுவதற்கு முன்னால் இருந்த வார்டுகளுக்காகக் கொண்டு வரப்பட்ட குடிநீர்த் திட்டம் இது. இந்தத் திட்டத்தை அப்போதே ஏற்பாடு செய்தும், அதற்கான நிதியை உங்களால் ஒதுக்க முடியவில்லை. 2011–ல் அம்மா ஆட்சி வந்ததற்குப் பின்னால்* JnNURM *திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. பிறகு* JnNURM *திட்டத்தை மத்திய அரசு நிறுத்திவிட்டது. அதற்குப் பின்னால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போது, இந்தத் திட்டத்தை மீண்டும் 2015–ல் கொண்டு வந்தார்கள்.*

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2018 ஜுன் 28

முற்பகல் 11–40

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூரிலிருந்து ஒருவர் WhatsApp மூலமாக பசுமைவழிச் சாலைத் திட்டம் குறித்தும், ஸ்டெர்லைட் ஆலை குறித்தும் தவறான தகவலைப் பரப்பியுள்ளார். எங்கள் மாவட்ட மக்களுக்கு 24 மணி நேரமும் தண்ணீர் கொடுப்பதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆரம்பித்த திட்டத்தை, இன்றைக்கு முதலமைச்சரின் ஒத்துழைப்போடு செயல்படுத்துகிறோம். குன்றத்தூரில் உள்ள சமூக ஆர்வலர் இதுகுறித்து WhatsApp–ல் ஒரு செய்தியைப் போடுகிறார். அதில் இருக்கக்கூடிய வாசகங்களைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அறிக்கையிலும் பார்த்தேன். அந்த WhatsApp–ல் வந்துள்ள செய்தியைப்போல், நிறைய செய்திகள் வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் அவர்களுக்கும் அங்கு இருக்கிற நிலைமை நன்றாகத் தெரியும். இது 24 மணி நேரமும் குடிநீர் வழங்கக்கூடிய அற்புதமான திட்டம். அவருடைய சிங்காநல்லூர் தொகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு 15 நாளைக்கு ஒருமுறைதான் குடிநீர் வந்து கொண்டிருந்தது. 2014 ஆம் ஆண்டுக்கு முன்பு, மாண்புமிகு அம்மா அவர்கள் என்னை உள்ளாட்சித் துறை அமைச்சராக நியமனம் செய்தபிறகு, 1½ கோடி ரூபாய் செலவு செய்து, பைப்லைன் போட்டு தண்ணீர் கொண்டுவந்து, சிங்காநல்லூர் மற்றும் ஒண்டிபுதூர் பகுதிகளில் குடிநீர் வழங்கப்படும் duration–ஐ குறைத்தோம். ஒவ்வொரு பகுதியிலும் 15 நாட்களுக்கு ஒரு முறை, 7 நாட்களுக்கு ஒரு முறை, 2 நாட்களுக்கு ஒரு முறை என்று வழங்கப்பட்டு வந்தது. இது இப்போது மாறியிருக்கிறது. இதெல்லாம் முறைப்படுத்தப்பட்டது. நீங்கள் கொண்டுவந்த திட்டம் நல்ல திட்டமாக இருந்ததால், அதை அம்மா அவர்கள் எடுத்து நிறைவேற்றியிருக்கிறார்கள். நீங்கள் கொண்டுவந்த பல்வேறு குடிநீர்த் திட்டங்களுக்கும் அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த நிலையில், இந்தத் திட்டத்தைக் கொண்டுவரும்போது, சிலர் மக்களுக்கு விரோதமான திட்டம் என்பதுபோல செய்திகளைப் பரப்புகிறார்கள். இது ஒரு மோசமான செயல். அதுமட்டுமல்ல; இன்றைக்கு எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி, முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், துணை முதலமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களைப் பற்றியெல்லாம் WhatsApp–ல் செய்திகள் வருகின்றன. எல்லோருமே மனிதர்கள்தான். எல்லோருக்கும் குடும்பம் இருக்கிறது. தவறான, மிகவும் மோசமான செய்திகளை WhatsApp–ல் போடுகிறார்கள்.

2018 ஜூன் 28] [திரு. எஸ்.பி. வேலுமணி]

உங்களைப்பற்றியும் இதுபோன்று WhatsApp–ல் செய்திகளைப் பரப்பி, மோசமான செயல்களைச் செய்கிறார்கள். குன்றத்தூரில் இருக்கக்கூடிய நபருக்கு, எங்களுடைய கோயம்புத்தூரைப்பற்றி என்ன தெரியும்?

இரண்டாவதாக, அந்தக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றி முழுமையாக நான் சொல்கிறேன். எந்தவொரு திட்டம் ஆரம்பித்தாலும், இதுபோன்ற மோசமான செயலை உடனே ஆரம்பித்துவிடுகிறார்கள். அவர்களுக்கு இதில் சம்பந்தமே கிடையாது. இதற்கு முன்புகூட, கோயம்புத்தூரில் 4, 5 நாட்கள் மழை பெய்தது. மழை வருவதைப் பொறுத்து, குறிச்சிக் குளத்திற்கு தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அப்போது shutter துருப்பிடித்திருப்பதாகவும், அதில் உடைப்பு ஏற்படப் போவதாகவும் WhatsApp–ல் செய்தியைப் பரப்பினார்கள். Shutter தண்ணீருக்குள்தான் இருக்கும். இங்கிருந்து ஒருவர் அதுகுறித்து WhatsApp–ல் செய்தி போட்டால், அங்கிருக்கின்றவர்கள் அப்படியே forward செய்கின்றார்கள். Forward செய்பவர்கள், அது உண்மையா, இல்லையா என்று யோசனை செய்ய வேண்டும். அதில் உண்மை நிலை என்னவென்று பார்க்க வேண்டும். சிலர் குடும்பத்தினரைப் பற்றியெல்லாம்கூட கடுமையாக விமர்சனம் செய்கிறார்கள். இதையெல்லாம் தவிர்க்க வேண்டும். இதுவெல்லாம் முற்றிலும் தவறான செயலாகும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சியின் 24x7 குடிநீர்த் திட்டத்தை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்திட, முந்தைய தி.மு.க. ஆட்சியில் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு உரிய கலந்தாலோசகரை நியமிக்க 11–2–2008 அன்று நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. 28–2–2008 அன்று ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டு, மூன்று கலந்தாலோசகர்கள் இறுதி செய்யப்பட்டு, 12–6–2008 அன்று விலைப்புள்ளி உறைகள் ஆய்வு செய்யப்பட்டன. இதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, 24x7 குடிநீர்த் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்திட கோவை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில், தீர்மான எண் 175, நாள் 29–8–2008–ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, 595 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மாமன்ற தீர்மானம் எண் 236–ன்படி,

31–1–2011 அன்று அரசுக்கு அனுப்பப்பட்டு, உரிய நிதி மானியத்தில் பெற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்குப்பிறகு உரிய நிதி உங்களுடைய ஆட்சியில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திற்கு 28–10–2013 அன்று மத்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் ஒப்புதலைப் பெற்று, AMRUT திட்டத்தின்கீழ் செயல்படுத்திட முடிவு செய்து, அரசாணை எண் 130, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27–8–2015–ல் நிருவாக அனுமதியை வழங்கினார்கள்.

அதைத் தொடர்ந்து, திறந்த வெளிப்படையான ஒப்பந்தத்தை அழைப்பதன்மூலம் தகுதியான நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க, தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்மூலம் தகுதியான ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்க, ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு, ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளுக்கு 18–9–2015–ல் ஒப்புதல் பெறப்பட்டது. இதன் பின்னர், 4–1–2017–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், எந்த ஒப்பந்ததாரர்களும் வரவில்லை. அதன்பிறகு, ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்காததன் காரணத்தால், 7–4–2017 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அப்போது நான்கு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இதனை ஒப்பந்தப்புள்ளி கூராய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழு கூராய்ந்து, இதில் இரண்டு நிறுவனங்கள் அடுத்த நிலைக்கான ஒப்பந்தப்புள்ளியைச் சமர்ப்பிக்க தேர்வு செய்யப்பட்டன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட வேண்டிய விதிமுறைகள் அடங்கிய ஒப்பந்தப் படிவங்கள் தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால், 14–6–2017 அன்று வழங்கப்பட்டது. அதன்படி, இரண்டாம் நிலை ஒப்பந்தம், 18–8–2017 அன்று கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் திருவாளர்கள் Suez Project Private Limited, Haryana வழங்கிய ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு, 646 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுமானத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

முற்பகல் 11–45

இந்தக் கட்டுமானத் திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் உள்ளடங்கியுள்ளன: நீரூற்றுக் குழாய்கள் 105 கிலோ மீட்டர்,

2018 ஜூன் 28] [திரு. எஸ்.பி. வேலுமணி]

தரைமட்ட கீழ் தொட்டி மற்றும் நீருந்து நிலையங்கள் 3; மேல்நிலைத் தொட்டிகள் 29; பகிர்மானக் குழாய்கள் 1,470 கிலோ மீட்டர், தானியங்கி குடிநீர் மானியத்துடன் வீட்டு இணைப்புகள் 1.5 இலட்சம்; கையடக்கத் தானியங்கி நீர் அளவைக் கருவிகள் 5; மொத்த குடிநீர் மானிகள் பதிவு வசதிகளுடன் 101; வாயுக் குளோரினேற்றிகள் 2; இணை குழாய்கள் 90 கி.மீ.; மேலும், குடிநீர் தர ஆய்வகமும் மற்றும் கணினிக் கட்டுப்பாடு மையம் போன்றவை அமைக்கப்பட வேண்டும். ஒரு வருட காலம் வரை ஆய்வுப் பணிகளும், அதனைத் தொடர்ந்து 4 வருட காலங்கள் கட்டுமானப் பணிகள் என 5 ஆண்டுக் காலத்திற்குள் இப்பணிகள் செய்து முடிக்கப்பட வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டு, இப்பணிக்கு மட்டும் 646 கோடி ரூபாய் மாநகராட்சிமூலம் இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல, இத்திட்டத்திற்கான நிதியைப் பொறுத்தவரையில், மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன்கூடிய AMRUT *திட்டத்திலே, மத்திய அரசின் பங்கு 33 சதவிகிதம்; மாநில அரசின் பங்கு 20 சதவிகிதம் மற்றும் மாநகராட்சியின் பங்கு 47 சதவிகிதம் என்ற அளவில் பங்கிட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. 21 வருட காலத்திற்கு இதே நிறுவனம் இத்திட்டத்தைத் தொடர்ந்து இயக்கவும் மற்றும் பராமரிப்பு செய்திடவும், வருடந்தோறும் மாநகராட்சிமூலம் உரிய கட்டணம் வழங்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான தொகை 21 வருட கால திட்டத்திற்கு 2,961 கோடி ரூபாய் என்று சொன்னீர்கள்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பொலிவியா நாட்டில் Cochabamba *நகரில் குடிநீர் வழங்கும்* SEMAPA *என்ற அமைப்பை* Aguas del Tunari *என்ற நிறுவனம் அரசுடன் ஒப்பந்தம் செய்து எடுத்துக் கொண்டது. அது பொது மக்களுக்குத் தண்ணீரை விற்பனை செய்தபோது, அந்த நாட்டிலே இப்படிப் பிரச்சினை வந்தது. அந்த ஒப்பந்தத்தின்மூலம் கிணற்று நீர், ஆற்று நீர், மழை நீர் எல்லாமே அவர்களுடைய கட்டுப்பாட்டில் வந்துவிடும் என்று* WhatsApp *செய்தி வந்தது; அது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அறிக்கையிலேயும் வந்திருக்கிறது. அந்தச் சூழ்நிலை வேறு. அது மொத்தமாக இராணுவ நாடாகவே இருந்தது. வருவாய் 100 டாலர்களாக இருந்த நிலையில், 20 டாலர்களை குடிநீருக்காக மட்டுமே அவர்கள் செலவு செய்தார்கள்.*

அந்த நிறுவனம் அங்கு dam கட்டுவதிலிருந்து, எல்லாவற்றையும் செய்திருக்கிறார்கள். அது வேறு. இதற்கு முழுமையாக நாம் பணம் கொடுத்துத்தான் செய்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், இது சிறுவாணி நீர் மட்டும் கிடையாது. ஆழியாறு அணை, சிறுவாணி அணை, பில்லூர்–1, பவானி திட்டம் ஆகிய நான்கிலிருந்து வரக்கூடிய நீரைத்தான் பகிர்ந்து கொடுக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். பொலிவியா நாட்டில் 2000–ல்தான் இந்தப் பிரச்சினை வந்தது. இந்தப் பிரச்சினை வந்த பின்னால், நீங்களும் அந்த சூயஸ் நிறுவனத்தை தரமற்ற நிறுவனம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படி இல்லை. நீங்கள்தான் அந்த நிறுவனத்தை இங்கே அழைத்துக் கொண்டு வந்து ஒப்பந்தம் கொடுத்திருக்கிறீர்கள். Operations and Maintenance Charge என்பது எல்லாவற்றுக்கும் வரும். 2044 வரைக்கும் அவர்கள் போட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட நீங்களும் 25 வருடத்திற்கு ஒப்பந்தம் போட்டிருக்கிறீர்கள். அதிலும் இங்கு நாம் செய்யும் maintenance செலவைவிட குறைவாகத்தான் வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், பழைய மாநகராட்சிப் பகுதி முழுவதும் உள்ள 72 வார்டுகள், தற்போதுள்ள 60 வார்டுகள் ஆகியவற்றை உள்ளடக்கி, புதிய வீட்டு இணைப்புகளை வழங்கும் பணிகளும், அதேபோல, பழைய வீட்டு இணைப்புகளுக்குப் பதிலாக புதிய வீட்டு இணைப்புகள் வழங்கும் பணிகளும், அனைத்து வீட்டு இணைப்புகளுக்கும் தானியங்கி மீட்டர் பொருத்திடும் பணிகளும் செயல்படுத்தப்படும். தற்போது பழைய வார்டுகள் 72 மற்றும் புதிய வார்டுகள் 60 ஆகியவற்றில் கோயம்புத்தூர் மாநகராட்சியால் செயல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டங்களுக்கு Operations and Maintenance செலவு என வருடத்திற்கு 71.50 கோடி ரூபாய் செலவாகிறது. 24x7 திட்டத்திற்கு 2020–2021 ஆம் ஆண்டிலிருந்து பராமரிப்புச் செலவினமாக 55 கோடியே 69 இலட்சம்தான் ஆகிறது. இதிலே வருடத்திற்கு கிட்டத்தட்ட 15 கோடி ரூபாயை மீதம் செய்திருக்கிறோம். இதில் பணியாளர்களை ஈடுபடுத்துதல், பராமரிப்புச் செலவினம், நீர்மானி கணக்கெடுத்தல், குளோரின் சேர்தல் போன்ற அனைத்துப் பணிகளும் செய்திடும் பொறுப்பு திருவாளர்கள் சூயஸ் நிறுவனத்தையே சாரும். அதுவும் இந்நிறுவனம் விலையை 19 சதவிகிதம் குறைவாக போட்டிருக்கிறார்கள். மேலும்,

2018 ஜூன் 28] [திரு. எஸ்.பி. வேலுமணி]

இந்தக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நுண்ணிய தொழில்நுட்பத்தின்மூலம் அதிக அழுத்தத்துடன் இரண்டாவது தளம் வரை சென்று, 24 மணி நேரமும் குடிநீர் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுதான் முக்கியம். ஏனென்றால் எல்லா பத்திரிகைகளிலும், வாரப் பத்திரிகைகளிலும் போட்டிருக்கிறார்கள். இதுதான் முக்கியம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதில் முழுமையாக அரசு விளக்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். கோவை மாநகராட்சி மன்றத்தில் முடிவு செய்யப்பட்டு அரசின் ஒப்புதல் பெற்ற கட்டணமே, மீட்டர் கட்டணமாக குடிநீருக்காக கோவை மாநகராட்சிமூலம் வசூல் செய்யப்படும். அந்த நிறுவனத்திற்கு அதையெல்லாம் கொடுக்கவில்லை. அதெல்லாம் செய்ய முடியாது. நீர்மானி அளவீடு பணி மட்டுமே திருவாளர்கள் சூயஸ் நிறுவனம்மூலம் செய்யப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி, குடிநீர்க் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் உரிமையோ, கட்டணங்களைப் பட்டியல் தயாரித்து வசூலிக்கும் உரிமையோ சூயஸ் நிறுவனத்திற்கு வழங்கப்படவில்லை. இப்பணிகள் அனைத்தையும் கோவை மாநகராட்சியே தொடர்ந்து மேற்கொள்ளும். இத்திட்டத்தில் ஆற்று நீர், ஆழ்குழாய்க் கிணறு ஆகிய அனைத்தும் கோவை மாநகராட்சியின் ஆளுமைக்குட்பட்டதாகவே இருக்கும். இதன்மீது சூயஸ் நிறுவனத்திற்கு எந்த உரிமையும் வழங்கப்படவில்லை.

முற்பகல் 11–50

மாண்புமிகு உறுப்பினர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப்போன்று, இந்தமாதிரியான சூழ்நிலை எப்போதும் வராது, அது மாநகராட்சியின் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். அதேபோன்று, குடிநீர் அட்டை வழங்கும் திட்டம் எதுவும் கிடையாது. குடிநீர் அட்டை போட்டால்தான் தண்ணீர் வரும்; இல்லையென்றால் வராது என்பதுபோல ஒரு சிலர் சொல்கின்றார்கள். அப்படியெல்லாம் கிடையாது. அதாவது குடிநீர் அட்டையைப் பயன்படுத்தி ஏதாவது ஓர் இயந்திரத்தில் சொருகினால் மட்டும்தான் தண்ணீர் வரும் என்ற நிலை என்றுமே ஏற்படாது. குடிநீரானது வீடுகளுக்குக் குடிநீர் வழங்கும் குழாய்மூலம் வழங்கப்படும். அதேபோன்று மோசமான முன்னுதாரணங்கள் படைத்த தனியார் நிறுவனம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனது அறிக்கையில் கூறியிருக்கின்றார்கள்.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2018 ஜூன் 28

இந்த கம்பெனியை பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1999 ஆம் ஆண்டில் 53 MLD கொள்ளளவு கொண்ட செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு திருவாளர்கள் சூயஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரையில் அவர்கள்தான் பராமரித்துக் கொண்டிருக்கின்றார்கள். அது 19–7–2007 அன்று உங்களுடைய ஆட்சியில் துவங்கி வைக்கப்பட்டதுதான். செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு, Operations and Maintenance பணிகளை இன்றுவரை தொடர்ந்து இந்த நிறுவனம்தான் செயல்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் கட்டுமானப் பணிக்கான அப்போதைய மதிப்பீடு 147 கோடியே 90 இலட்சம் ரூபாய் என இருந்தது. 30–6–2018 வரை இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிக்கான தொகை ரூ.525 கோடியே 63 இலட்சம். Operations and Maintenance பணிகளுக்காக இதுவரையில் அவர்களுக்குத்தான் கொடுத்துள்ளீர்கள்.

அதேபோன்று, நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் 100 MLD–க்கும் நீங்கள்தான் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிக்காகக் கொடுத்திருக்கின்றீர்கள். அதனுடைய கட்டுமானத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.914 கோடியே 42 இலட்சம்; திரு. கார்த்திக் இதைத் தெரிந்துகொள்ளுங்கள். அதிலே Operations and Maintenance–க்காக மட்டும் 7 வருடங்களுக்கு 500 கோடியே 29 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கின்றார்கள். அப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான், துணை முதலமைச்சராக இருந்தார்கள்; உள்ளாட்சித் துறையையும் அவர்தான் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது 7 வருடங்களுக்கே 500 கோடியே 29 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி, இப்போது 21 வருடங்களுக்குக் கணக்கு போட்டுப் பார்த்தால், இன்னும் இதைவிட அதிகமாகத்தான் வரும். Operations and Maintenance என்பது routine ஆக வருவதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

சூயஸ் நிறுவனம்தான், பழமையான நிறுவனம். இது நீங்கள் அழைத்துக் கொண்டு வந்த நிறுவனமாக இருந்தாலும், இதை நீங்கள் தரமற்ற நிறுவனம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். நீங்கள்

கொண்டு வந்த நிறுவனம்தான்; நல்ல நிறுவனம்தான்; என்வே, திரும்பவும் அவர்கள் வந்து பணியை எடுத்திருக்கின்றார்கள் அவர்கள், முக்கிய திட்டமான மத்திய தரைக் கடலையும், செங்கடலையும் இணைக்கும் சூயஸ் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவாளர்கள் சூயஸ் நிறுவனம் இந்தியாவில் டெல்லி, கொல்கத்தா, மும்பை, பெங்களூரு, தாவண்கரே ஆகிய நகரங்களில் மிகப் பெரிய அளவில் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். அதேபோன்று, அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, ஆஸ்திரேலியா, எகிப்து, இத்தாலி, கனடா, தென் ஆப்பிரிக்கா, பிரேசில், நெதர்லாந்து உள்ளிட்ட 53 நாடுகளில் குடிநீர்த் திட்டப் பணிகளை இந்த கம்பெனி செய்து கொண்டிருக்கின்றது. உலக அளவில் தற்போது உள்ள நிருவாக அறிவிப்பின் அடிப்படையில் Engineering, Procurement and Construction என்ற முறையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்படி கோயம்புத்தூர் மாநகராட்சியில் 24x7 குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் அனைத்துக் கட்டமைப்புகளும் கோவை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலே இருக்கும். திருவாளர்கள் சூயஸ் நிறுவனம், இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும். இது எல்லாப் பத்திரிகைகளிலும் பெரிய செய்தியாக வந்துவிட்டது. இதற்கு கொஞ்சம் அதிக நேரம் எடுத்து பதில் சொல்ல வேண்டியிருக்கின்றது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முக்கியமான ஒன்று. இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொல்கின்றார்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: சீக்கிரம் என்னுடைய உரையை முடித்துவிடுகின்றேன். (குறுக்கீடு) தற்போதுள்ள 50 சதவிகித குடிநீர் இழப்பினைத் தடுத்து, அதனை 15 சதவிகித அளவில் குறைக்க முடியும். எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் தண்ணீர் இழப்பு ஏற்படும். இந்த 50 சதவிகித குடிநீர் இழப்பு தடுக்கப்பட்டு, இப்போது 15 சதவிகித அளவில்தான் இழப்பு வரும். இதனால் கோவை மாநகராட்சி பகுதியில் உள்ள பழைய 72 வார்டுகளிலும், புதிதாக வரையறுக்கப்பட்ட 60 வார்டுகளிலும் உள்ள மக்களுக்கு

24 மணி நேரமும் குடிநீர் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் அப்போது ஆரம்பிக்கப்பட்டாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வேகமாகச் செயல்படுத்துவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கின்றது. இந்த மாதிரி யாராவது ஒருவர் தவறாக செய்திகளைப் பரப்பும்போது, நீங்கள் உண்மை நிலையை அறிந்து ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; கோவை மாவட்டத்தில் பார்த்தீர்களென்றால், பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். விமான நிலைய விரிவாக்கப் பணிகள் 20 ஆண்டுகளாக நிலுவையில் இருந்தன; அதனை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளார்கள். அதேபோன்று, அவிநாசியில் ஒரு மேம்பாலம், bus port, multi level car parking, இதுபோன்று பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டங்களையெல்லாம் நடைமுறைப்படுத்துவோம். 24 மணி நேரமும் குடிநீர் தரக்கூடிய இந்தத் திட்டத்திற்கு WhatsApp மூலமாகவோ அல்லது வேறு எந்த வகையிலோ, யார் எதிர்ப்பு தெரிவித்தாலும், அது கோவை மாவட்ட மக்களுக்கு துரோகம் செய்வதாகத்தான் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் ஓர் அற்புதமான திட்டம். இதனை கூடியவிரைவில் நிறைவேற்றி, 24 மணி நேரமும் கோவை மாநகராட்சியில் இருக்கக்கூடிய மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று added areas–ல் நிறைய திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன்பேரில் இன்றைக்கு நிறைய tanks கட்டுகின்றோம். அந்தத் திட்டங்களும் நல்ல முறையில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிரி. நீங்கள் உட்காருங்கள். நீங்கள் கேட்டது தகவல் கோரலில் வராது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் அதனை மனுவாகக் கொடுங்கள், அதனை நான் பார்க்கின்றேன். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.